"THE HINDU"

PAGE NO: 03

DATE : 28.04.21

## Pondicherry varsity shut till April 30

PUDUCHERRY

The Pondicherry University has extended the closure of its campus till April 30. The measure was taken to limit the spread of COVID-19 amid a surge in cases. The university had earlier announced that it was shutting down the campus till April 28.

"DINAMANI"

PAGE NO: 04

DATE: 28.04.21

## புதுச்சேரி மத்திய பல்கலை. மேலும் 3 நாள்களுக்கு மூடல்

**புதுச்சேரி, ஏப்.27:** புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் வருகிற 30-ஆம் தேதி வரை மேலும் 3 நாள்களுக்கு மூடப்படுகிறது.

புதுச்சேரியில் கரோனா தொற்றின் 2-ஆவது அலை பரவல் காரணமாக, அதிகளவிலான மக்கள் இந்த நோய்த் தொற்றுக்குள்ளாகி வருகின்றனர். இறப்பு எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக, மாணவர்கள், ஆசிரியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் கடந்த 23-ஆம் தேதி முதல் செவ்வாய்க்கிழமை வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், கரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக, இந்த உத்தரவு மேலும் 3 நாள்களுக்கு நீட்டிக்கப்பட்டது. அதன்படி, புதன்கிழமை (ஏப்.28) முதல் வெள்ளிக்கிழமை (ஏப்.30) வரை புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் மூடப்படும்.

பல்கலைக்கழகத்தில் அத்தியாவசிய சேவைப் பணிகளுக்கு தடை ஏதுமில்லை என பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்தது.

"HINDU TAMIL"

PAGE NO: 03

DATE: 28.04.21

## புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் மேலும் 3 நாட்களுக்கு மூடல்

■ **புதுச்சேரி**

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் வரும் 30-ம் தேதி வரை மேலும் 3 நாட்களுக்கு மூடப்படுகிறது.

கரோனா தொற்று அதிகரிப்பால் ஏப்ரல் 23 முதல் வரும் 27-ம் தேதி வரை பல்கலைக்கழக வளாகம் மூடப்படுகிறது. அதே நேரத்தில் பல்கலைக்கழகத்தில் அத்தியாவசியப் பணிகளுக்கு இந்த மூடல் பொருந்தாது என்று புதுச்சேரி பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் வரும் 30-ம் தேதி வரை மேலும் 3 நாட்களுக்கு மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய பல்கலைக்கழக பதிவாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "கரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக, இன்று (ஏப். 28) முதல் வரும் 30-ம் தேதி வரை புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் மூடப்படுகிறது.

பல்கலைக்கழகத்தில் அத்தியாவசிய சேவைப் பணிகளுக்கு தடை ஏதுமில்லை" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"DINAMALAR"

PAGE NO: 04

DATE : 28.04.21

## 3 நாட்களுக்கு பல்கலை., மூடல்

புதுச்சேரி, ஏப். 28–
புதுச்சேரி பல்கலைக் கழகம் மேலும் 3 நாட்களுக்கு மூடப்படுகிறது.

கொரோனா தொற்று பரவல் எதிரொலியாக, புதுச்சேரி பல்கலைக்கழகம் கடந்த 23ம் தேதியில் இருந்து, 27ம் தேதி வரை மூடப்பட்டது. இந்நிலையில், கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக, 28ம் தேதியில் (இன்று) இருந்து, வரும் 30ம் தேதி வரை மேலும் 3 நாட்களுக்கு பல்கலைக் கழக வளாகம் மூடப்படும் என, பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

"DINAKARAN"

PAGE NO: 06

DATE: 28.04.21

## புதுவை பல்கலைக்கழகம் 30ம் தேதி வரை மூடல்

புதுச்சேரி, ஏப். 28: கொரோனா தொற்று அதிகரிப்பால் கடந்த 23ம் தேதி முதல் 27ம் தேதி வரை புதுவை பல்கலைக்கழகம் மூடப்பட்டது. இந்நிலையில் மேலும் 3 நாட்களுக்கு பல்கலைக்கழகம் மூடப்படுகிறது என பல்கலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக புதுவை பல்கலைக் கழக பதிவாளர் சேகர் அனைத்து துறைகளுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக, இன்று (28ம் தேதி) முதல் வரும் 30ம் தேதி வரை புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் மூடப்படுகிறது. பல்கலைக்கழகத்தில் அத்தியாவசிய சேவை பணிகளுக்கு தடை ஏதுமில்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.